# வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம்

## TNPSC
## நடப்பு நிகழ்வுகள்

(A book for TNPSC Examination)

**ஆகஸ்ட் 2024**

Since 2011

An ISO 9001: 2015 Institution | Providing Excellence Since 2011


**Head Office**

Old No. 52, New No. 1, 9th Street,
F Block, 1st Avenue Main Road, (Near Istha Siddhi Vinayakar Temple), Anna Nagar East – 600 102.
Phone: 044-2626 5326 | 98844 21666 | 98844 32666

Branches

**SALEM**
No. 189/1, Meyanoor Road,
Near ARRS Multiplex, (Near Salem New Bus Stand),
Opp. Venkateshwara Complex,
Salem - 636 004.
**Ph: 0427-2330307 | 95001 22022**

**KOVAI**
No. 347, D.S. Complex
(3rd floor), Nehru Street,
Near Gandhipuram Central Bus Stand, Ramnagar,
Kovai - 641 009.
**Ph: 75021 65390**

**MADURAI**
No. 199, Dharshini Tower,
1st Floor, Vaigai Colony,
Anna Nagar,
Madurai - 625 020.
**Ph: 91500 21999**
**91500 21998**

**TIRUNELVELI**
No. 58, IVY Towers, 3rd Floor,
Palayamkottai,
Near Palai Bus Stand,
(Next to Muthamil Hospital),
Tirunelveli - 627 002.
**Ph: 91500 10079**

**THANJAVUR**
Muthu Complex,
(Pantaloons Showroom Basement)
No. 243, Cauvery Nagar,
Opp. New Housing Unit,
Thanjavur - 613 005.
**Ph: 78711 69099 | 78715 71819**

**KOVILPATTI**
No. 15, Kathiresan Kovil Road,
Behind Kaliamman Temple,
Kovilpatti – 628 501.
**Ph: 90037 90335**
**81222 80685**

**THIRUCHENGODE**
Vivekananda Educational Institutions
Elayampalayam (Po),
Thiruchengode (Tk),
Namakkal (Dt) - 637205.
**Ph: 7845779908**

www. vetriias. com

# முகவுரை



**மு.சண்முகம்**

நிறுவனர்

வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம்

## இயக்குநர் வாழ்த்து மடல்

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்.**

பொருள்:

ஒன்றை பற்றி நினைத்தவர் நினைத்த படியே செயல்புரிவதில் உறுதியடைந்தவராக இருந்தால் நினைத்தவாறு வெற்றியே பெறலாம்.

**என் அன்பிற்கினிய மாணவர்களுக்கு**

மேற்கண்ட வள்ளுவரின் வாய்மொழியினை மெய்பிக்க விடா முயற்சியுடன், கடினமாக உழைத்து நேர்மையான வழியில் மாணவர்கள் தங்கள் வெற்றியினை அடைய **வெற்றி ஆட்சிப்பணிகள் பயிற்சி நிறுவனம்** சரியான வழிகாட்டுதலுடன், தரமான பயிற்சியினை அளித்து ஒவ்வொரு மாணவரின் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி, அவர்களின் குறிக்கோள்களை நிறைவு செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறது.

நம் பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு அனைத்து பாடத்திலும் அடிப்படை அறிவை தெளிவுப்படுத்தும் வகையில் நடத்தப்படும் அதனை விளக்கும் வகையில் நம்முடைய அனைத்து கையேடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலினை படித்து பயன்பெற மீண்டும் ஒருமுறை என்னுடைய வாழ்த்துகளை உங்களுக்கு உரித்தாக்கி கொள்கிறேன்.

மு.சண்முகம்
இயக்குனர்
வெற்றி ஐ.ஏ.எஸ் பயிற்சி நிறுவனம்

வெளியீட்டாளர்

வெற்றி சண்முகம் பப்ளிகேஷன்

எஃப்–பிளாக், புதிய எண். 1, 3–வது மாடி, 9–வது தெரு, 1–வது அவன்யூ பிராதான சாலை,

சிந்தாமணி, அண்ணாநகர் (கிழக்கு), சென்னை–600 102.

தொலைபேசி: 044–26265326

© All rights reserved with the publisher. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without the written permission of the publisher, will be responsible for the loss and may be punished for compensation under copyright act.

# பொருளடக்கம்


வரலாறு 01




10 அரசியல் அறிவியல்

புவியியல் 17






19 பொருளாதாரம்

அறிவியல் 21



தினசரி
தேசிய நிகழ்வு 22






26 சர்வதேச நிகழ்வு

தமிழ்நாடு 27



# 1. வரலாறு






## 1.1 முக்கிய தினங்கள்

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஆகஸ்ட் 1** | **உலகளாவிய இணைய தினம்** | ▪ உலகளாவிய இணையம் தொடங்கப்பட்டதை நினைவுகூரும் வகையில் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ உலகளாவிய இணையத்தை டிம் பெர்னர்ஸ்–லீ 1989 இல் கண்டுபிடித்தார் |
| **ஆகஸ்ட் 3** | **இந்திய உறுப்பு தான தினம்** | ▪ உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஆகஸ்ட் 3 அன்று ஆண்டுதோறும் **இந்திய உறுப்பு தான தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ இந்தியாவில் 1994 **ஆகஸ்ட் 3** அன்று முதல் முறையாக இறந்தவரின் இதய மாற்று அறுவை சிகிச்சையை நினைவுகூரும் வகையில் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.<br>குறிப்பு<br>▪ உலக உறுப்பு தான தினம் ஒவ்வொரு ஆண்டும் **ஆகஸ்ட் 13** அன்று அனுசரிக்கப்படுகிறது. |
| **ஆகஸ்ட் 1 முதல் 7 வரை** | **உலக தாய்ப்பால் வாரம்** | ▪ புதிதாகப் பிறந்த குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு தாய்ப்பால் ஊட்டுவதன் முக்கியத்துவத்தை ஊக்குவிக்க ஒவ்வொரு ஆண்டும் **ஆகஸ்ட் 1 முதல் 7 வரை உலக தாய்ப்பால் வாரம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024 கருப்பொருள்: Closing the gap: Breastfeeding support for all. |
| **ஆகஸ்ட் 7** | **தேசிய கைத்தறி தினம்** | ▪ நாடு முழுவதும் உள்ள கைத்தறி நெசவாளர்களை கௌரவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் **ஆகஸ்ட் 7** அன்று இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது<br>▪ **சுதேசி தினம்** தொடங்கப்பட்டதை நினைவுகூரும் வகையில் இந்த தினம் தேர்ந்தெடுக்கப்பட்டது.<br>▪ **2015** முதல் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஆகஸ்ட் 7** | **தேசிய ஈட்டி எறிதல் தினம்** | ▪ இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் **ஆகஸ்ட் 7 அன்று தேசிய ஈட்டி எறிதல் தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ டோக்கியோ ஒலிம்பிக்கில் **நீரஜ் சோப்ரா தங்கப் பதக்கம் வென்றதை கௌரவிக்கும் வகையில்** இந்திய தடகள கூட்டமைப்பு இந்த தினத்தை அறிவித்தது. |
| **ஆகஸ்ட் 9** | **உலக பழங்குடியினர் தினம்** | ▪ இந்த நாள் **உலக பழங்குடி மக்களின் சர்வதேச தினம்** என்றும் அழைக்கப்படுகிறது.<br>▪ பூர்வீக மக்களின் நில உரிமைகள் மற்றும் சமூக–பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் போன்ற சவால்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 9 அன்று இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024 கருப்பொருள்: "Protecting the Rights of Indigenous Peoples in Voluntary Isolation and Initial Contact".<br>▪ 1994 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் (UNGA) இந்த தினம் அறிவிக்கப்பட்டது |
| **ஆகஸ்ட் 10** | **உலக உயிரி எரிபொருள் தினம்** | ▪ நிலையான ஆற்றல் மூலமாக உயிரி எரிபொருட்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்த ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 10 அன்று இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ ஆகஸ்ட் 9, 1893 அன்று ஜெர்மானிய பொறியாளர் சர் ருடால்ஃப் டீசல் வேர்க்கடலை எண்ணெயில் எஞ்சினை வெற்றிகரமாக இயக்கியதை இந்த தினம் நினைவுகூருகிறது.<br>▪ 2024ம் ஆண்டுக்கான கருப்பொருள்: "Sustainable Biofuels: Fueling a Greener Future"<br>குறிப்பு<br>▪ 2025–26க்குள் பெட்ரோலில் 20% எத்தனால் கலப்பு இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது. |
| **ஆகஸ்ட் 10** | **உலக சிங்க தினம்** | ▪ சிங்கங்களின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த **ஆகஸ்ட் 10** அன்று உலக சிங்க தினம் கொண்டாடப்படுகிறது.<br>▪ இது 2013இல் Big Cat Rescue எனும் நிறுவனத்தால் தொடங்கப்பட்டது.<br>குறிப்பு<br>▪ இந்தியாவில் காணப்படும் ஆசிய சிங்கங்கள் கிர் காடுகளில் மட்டுமே காணப்படுகின்றன.<br>▪ சமீபத்திய கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் சிங்கங்களின் எண்ணிக்கை சுமார் 674. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஆகஸ்ட் 12** | **சர்வதேச இளைஞர் தினம்** | ▪ உலகளவில் இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 12 அன்று அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024 ஆம் ஆண்டின் கருப்பொருள்: "From Clicks to Progress: Youth Digital Pathways for Sustainable Development.."<br>▪ இந்த நாள் முதன்முதலில் 1999 இல் அறிவிக்கப்பட்டது மற்றும் ஆகஸ்ட் 12, 2000 அன்று அனுசரிக்கப்பட்டது |
| **ஆகஸ்ட் 12** | **உலக யானைகள் தினம்** | ▪ யானைகளின் அவலநிலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 12 அன்று இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024 கருப்பொருள்: "Personifying Prehistoric Beauty, Theological Relevance, and Environmental Importance."<br>குறிப்பு<br>▪ 2022ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 2,961 யானைகள் பதிவு செய்யப்பட்டன<br>▪ யானை வழித்தடக் குழு தமிழ்நாட்டில் 42 யானை வழித்தடங்களை அடையாளம் கண்டுள்ளது. |
| **ஆகஸ்ட் 13** | **உலக உறுப்பு தான தினம்** | ▪ உறுப்பு தானம் செய்வோரின் முக்கிய தேவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தானம் செய்வோர் பதிவை ஊக்குவிக்கவும் ஆகஸ்ட் 13, 2024 அன்று இந்த நாள் அனுசரிக்கப்பட்டது.<br>▪ 2024ஆம் ஆண்டிற்கான கருப்பொருள்: "இன்று யாரோ ஒருவரின் புன்னகைக்கு காரணமாக இருங்கள்!"<br>குறிப்பு<br>▪ தேசிய உறுப்பு தான தினம் இந்தியாவில் ஆகஸ்ட் 3 அன்று அனுசரிக்கப்படுகிறது.<br>▪ இந்தியாவில் உறுப்பு தானம் மனித உறுப்புகள் மற்றும் திசுக்கள் மாற்று சட்டம், 1994 மூலம் ஒழுங்குபடுத்தப்படுகிறது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஆகஸ்ட் 20** | **உலக கொசுக்கள் தினம்** | ▪ கொசுக்களால் பரவும் நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த **ஆகஸ்ட் 20** அன்று **உலக கொசுக்கள் தினம்** அனுசரிக்கப்படுகிறது .<br>▪ **2024 கருப்பொருள்:** மலேரியாவுக்கு எதிரான போராட்டத்தை துரிதப்படுத்தி சமத்துவமான உலகத்தை உருவாக்குதல்.<br>குறிப்பு<br>▪ **ஆகஸ்ட் 20, 1897 அன்று, சர் ரொனால்ட் ராஸ் பெண் அனாபிலிஸ் கொசுவின்** வயிற்றில் மலேரியா ஒட்டுண்ணியை கண்டுபிடித்தார்.<br>▪ இந்த கண்டுபிடிப்பு, கொசுக்கள் மனிதர்களுக்கு மலேரியாவை பரப்புகின்றன என்பதற்கான முதல் ஆதாரத்தை வழங்கி மருத்துவ அறிவியலில் புரட்சியை ஏற்படுத்தியது |
| **ஆகஸ்ட் 22** | **மெட்ராஸ் தினம்** | ▪ ஆகஸ்ட் 22 அன்று வருடந்தோறும் சென்னை நகரம் உருவானதை நினைவுகூரும் வகையில் கொண்டாடப்படுகிறது.<br>▪ **மெட்ராஸ் ஆகஸ்ட் 22, 1639 அன்று நிறுவப்பட்டது**<br>▪ ஆகஸ்ட் 22, 1639 அன்று பிரிட்டிஷ் ஈஸ்ட் இந்தியா கம்பெனி உள்ளூர் நாயக்க ஆட்சியாளர்களிடமிருந்து சென்னபட்டினம் என்ற நிலப்பகுதியை வாங்கியதன் மூலம் மெட்ராஸ் நிறுவப்பட்டது. |
| **ஆகஸ்ட் 29** | **தேசிய விளையாட்டு தினம்** | ▪ மேஜர் தியான் சந்த் அவர்களின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் **ஆகஸ்ட் 29** அன்று இந்த ടநாள் அனுசரிக்கப்படுகிறது<br>▪ இந்த நாள் முதன்முதலில் 2012 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. |

வெற்றி I.A.S. கல்வி மையம் VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

# 1.2 பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

## பயிற்சி தரங் சக்தி

- இந்திய விமானப்படை (IAF) தனது மிகப்பெரிய பன்முக பயிற்சியான **'தரங் சக்தி'**–ஐ நடத்த உள்ளது.
- இது ஆகஸ்ட் 6 அன்று **தமிழ்நாட்டின் சூலூரில் இரண்டு கட்டங்களாக** நடைபெற உள்ளது.
- பங்கேற்கும் நாடுகளிடையே சிக்கலான வான் பயிற்சிகள் மற்றும் பணிகள் மூலம் இணக்கத்தன்மையையும் பரஸ்பர புரிதலையும் வளர்ப்பதே இந்த பயிற்சியின் நோக்கமாகும்.
- 18 நாடுகள் இந்த பயிற்சியில் பங்கேற்கின்றன.

## உதாரா சக்தி பயிற்சி (Udara Shakti)

- உதாரா சக்தி 2024 பயிற்சி சமீபத்தில் மலேசியாவில் நிறைவடைந்தது.
- இது இந்தியா மற்றும் மலேசியாவுக்கு இடையிலான இருதரப்பு விமானப்
- பயிற்சியாகும்.மலேசியா பற்றி
- தலைநகரம் – கோலாலம்பூர்
- பிரதமர் – அன்வர் இப்ராஹிம்
- அதிகாரப்பூர்வ மொழி – மலாய்

## கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம்

- பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் சென்னையில் கடலோரக் காவல்படையின் புதிய கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தை (MRCC) திறந்து வைத்தார்.
- இது கடலில் ஆபத்தில் சிக்கிய கடற்படையினர் மற்றும் மீனவர்களை மீட்பதற்கான மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்பை வழங்கும்.
- மேலும் இரண்டு புதிய கடலோரக் காவல்படை பிரிவுகளும் தொடங்கப்பட்டன .
- அவை,
  - பிராந்திய கடல் மாசுகட்டுப்பாடு மையம் (RMPRC) சென்னையில்: இந்தியப் பெருங்கடல் பகுதியில் உள்ள கடலோர மாநிலங்களை ஒட்டிய நீர்ப்பரப்புகளில் கடல் மாசுபாட்டிற்கு எதிரான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக முதன் முறையாக அமைக்கப்பட்ட மீட்புக் குழுவாகும்
  - புதுச்சேரியில் கடலோரக் காவல்படை விமானப் பகுதியை திறந்து வைத்தார் .

## மித்ரா சக்தி இராணுவப் பயிற்சி

- மித்ரா சக்தி பயிற்சியின் 10வது பதிப்பு சமீபத்தில் இலங்கையில் தொடங்கியுள்ளது.
- இது இந்தியா மற்றும் இலங்கை இராணுவத்திற்கு இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சியாகும்.

**இலங்கை பற்றி**

- **தலைநகரங்கள்** – கொழும்பு
- **நாணயம்** – இலங்கை ரூபாய்
- **ஜனாதிபதி** – ரணில் விக்கிரமசிங்க

## தாய்லாந்தின் புதிய பிரதமர்

- **பேடாங்டார்ன் சினவத்ரா** சமீபத்தில் தாய்லாந்தின் புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இளம் வயதில் தாய்லாந்தின் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்

**தாய்லாந்து பற்றி**

- **தலைநகரம்** – பாங்காக்
- **அதிகாரப்பூர்வ மொழி** – தாய் மொழி
- **மன்னர்** – மகா வஜிரலாங்கோர்ன்

## RHUMI–1 ஏவப்பட்டது

- இந்தியாவின் முதல் மீண்டும் பயன்படுத்தக்கூடிய கலப்பு ராக்கெட் RHUMI–1 சமீபத்தில் வெற்றிகரமாக ஏவப்பட்டது.
- இது தமிழ்நாட்டை சேர்ந்த ஸ்பேஸ் ஜோன் இந்தியா என்ற ஸ்டார்ட்அப் நிறுவனத்தால் மார்ட்டின் குழுமத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டது.
- இது சென்னையில் உள்ள திருவிடந்தையில் இருந்து ஏவப்பட்டது.

வெற்றி I.A.S. கல்வி மையம் VETRI I.A.S. STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

- RHUMI–1 என்பது திட மற்றும் திரவ எரிபொருட்களின் கலவையைப் பயன்படுத்தி செயல்திறனை மேம்படுத்தவும் செயல்பாட்டு செலவுகளைக் குறைக்கவும் உதவும் ஒரு கலப்பு ராக்கெட் எந்திரமாகும்.

### INS அரிகாட்

- இரண்டாவது அரிஹந்த் வகை நீர்மூழ்கிக் கப்பலான 'INS அரிகாட்' சமீபத்தில் இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்டது.
- இது கப்பல் இணைந்த பிறகு , இந்திய கடற்படையில் இப்போது இரண்டு SSBN (கப்பல், நீர்மூழ்கி, ஏவுகணை, அணு) நீர்மூழ்கிக் கப்பல்கள் உள்ளன.
- INS அரிஹந்த் இந்தியாவின் முதல் உள்நாட்டு அணு நீர்மூழ்கிக் கப்பலாகும்.
- இது மேம்பட்ட தொழில்நுட்ப கலன் (ATV) திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டது
- ATV திட்டம் 2016 இல் தொடங்கப்பட்டது

### NAMAN திட்டம்

- – இந்திய ராணுவம் NAMAN திட்டத்தின் முதல் கட்டத்தை தொடங்கியது.
- – இது பாதுகாப்பு ஓய்வூதியர்கள், முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு சிறந்த ஆதரவு மற்றும் சேவைகளை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.
- – இந்தத் திட்டம் கணிசமாக விரிவடைய உள்ளது மற்றும் அடுத்த 2 முதல் 3 ஆண்டுகளில் நாடு முழுவதும் சுமார் 200 மையங்களை நிறுவுவதை இலக்காக கொண்டுள்ளது.

# 1.3 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

### கம்பேனியன் ஆஃப் தி ஆர்டர் விருது

- பிஜியின் மிக உயரிய குடிமக்கள் விருதான கம்பேனியன் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் பிஜி விருது ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கு வழங்கப்பட்டது.
- ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கு கம்பேனியன் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் பிஜி விருதை பிஜி நாட்டின் ஜனாதிபதி ராது வில்லியம் மைவாலிலி கடோனிவெரே வழங்கினார்.

குறிப்பு:

- பிரதமர் நரேந்திர மோடிக்கு அவரது உலகளாவிய தலைமைத்துவத்தை அங்கீகரிக்கும் வகையில் 2023ஆம் ஆண்டு இந்த விருது வழங்கப்பட்டது.

### ராஷ்ட்ரிய விஞ்ஞான் புரஸ்கார் விருது

- விஞ்ஞானிகளுக்கான தேசிய விருதுகளான ராஷ்ட்ரிய விஞ்ஞான் புரஸ்கார் விருதை சமீபத்தில் மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்த விருதுகள் ஆகஸ்ட் 23 அன்று தேசிய விண்வெளி தினத்தன்று வழங்கப்படும்.
- இந்த தினம் சந்திரயான்–3 நிலவில் தரையிறங்கியதை குறிக்கும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.

விருது பெற்றவர்கள்:

- விஞ்ஞான் ரத்னா – கோவிந்தராஜன் பத்மநாபன்.
- விஞ்ஞான் ஸ்ரீ – 13 விஞ்ஞானிகள்.
- விஞ்ஞான் யுவா – 18 விஞ்ஞானிகள்.
- விஞ்ஞான் குழு விருது – இஸ்ரோவின் சந்திரயான்–3 குழு.

### 2022–ஆம் ஆண்டிற்கான தேசிய திரைப்பட விருதுகள்

- 70வது தேசிய திரைப்பட விருதுகள் வென்றவர்களின் பட்டியல் புது டில்லியில் உள்ள தேசிய ஊடக மையத்தில் அறிவிக்கப்பட்டது .
- சிறந்த திரைப்படம் – ஆட்டம்
- சிறந்த நடிகர் – ரிஷப் ஷெட்டி (காந்தாரா (கன்னடம்)
- சிறந்த நடிகை விருது

வெற்றி I.A.S. கல்வி மையம்

- நித்யா மேனன் – திருச்சிற்றம்பலம் (தமிழ்)
- மானசி பாரேக் – குட்ச் எக்ஸ்பிரஸ் (குஜராத்தி)

- சிறந்த இசையமைப்பாளர் (பின்னணி இசை) – **ஏ.ஆர்.ரஹ்மான்**
- சிறந்த இசையமைப்பாளர் (பாடல்கள்) விருது – **பிரீத்தம்**
- சிறந்த தமிழ் திரைப்படம் – பொன்னியின் செல்வன்–பாகம்
- சிறந்த பொழுதுபோக்கு திரைப்படம் – காந்தாரா
- சிறந்த நடன இயக்க விருது – ஜானி மாஸ்டர் மற்றும் சதீஷ் கிருஷ்ணன் (திருச்சிற்றம்பலம்)
- சிறந்த இயக்குனர் – சூரஜ் ஆர். பர்ஜாத்யா (உன்சாய்: ஜெனித் (இந்தி))

**தேசிய திரைப்பட விருதுகள் பற்றி**

- முதன்முதலில் வழங்கப்பட்டது – **அக்டோபர் 10, 1954**
- வழங்கப்படும் காரணம் – **இந்திய சினிமாவில் திரைப்பட சாதனைகளுக்காக**
- **வழங்குபவர்** – திரைப்பட விழாக்கள் இயக்குனரகம்
- இயக்குனர் – செந்தில் ராஜன்

# 1.4 விளையாட்டு

## பாரிஸ் ஒலிம்பிக் 2024

- பாரிஸ் ஒலிம்பிக் 2024 சமீபத்தில் முடிவடைந்தது.
- இந்தியா பதக்க பட்டியலில் 71வது இடத்தைப் பிடித்தது.
- இது டோக்கியோ 2020இல் பெற்ற 48வது இடத்திலிருந்து பின் தங்கியுள்ளது ஆகும்.
- 2024 பாரிஸ் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற இந்தியர்கள்

| இந்திய விளையாட்டு வீரர்கள் | பதக்கம் | போட்டி |
|---|---|---|
| மனு பாகர் | வெண்கலம் | மகளிர் 10 மீ ஏர் பிஸ்டல் போட்டி |
| மனு பாக்கர் மற்றும் சரப்ஜோத் சிங் | வெண்கலம் | 10 மீ ஏர் பிஸ்டல் கலப்பு அணி போட்டி |
| ஸ்வப்னில் குசாலே | வெண்கலம் | ஆடவர் 50 மீ துப்பாக்கி 3 நிலைகள் |
| இந்திய ஹாக்கி அணி | வெண்கலம் | ஆடவர் ஹாக்கி |
| நீரஜ் சோப்ரா | வெள்ளி | ஆடவர் ஈட்டி எறிதல் |
| அமன் செஹ்ராவத் | வெண்கலம் | மல்யுத்தம் ஆடவர் 57 கிலோ ஃப்ரீஸ்டைல் |

- நீரஜ் சோப்ரா இந்தியாவின் இரு முறை ஒலிம்பிக் பதக்கம் வென்ற ஐந்தாவது வீரரானார்.
- இந்திய வீரர்கள் 16 விளையாட்டுகளில் 69 பதக்க நிகழ்வுகளில் போட்டியிட்டனர்.
- மனு பாகர் ஒலிம்பிக் துப்பாக்கி சுடுதலில் பதக்கம் வென்ற முதல் இந்திய பெண் ஆனார்.
- அவர் ஒரே ஒலிம்பிக்கில் இரண்டு பதக்கங்களை வென்ற முதல் இந்திய வீராங்கனை ஆனார்

வெற்றி I.A.S. கல்வி மையம்

# 1.5 நியமனங்கள்

## UPSC தலைவர்

- மனோஜ் சோனி பதவி விலகியதைத் தொடர்ந்து, **பிரீத்தி சுதன்** சமீபத்தில் ஒன்றிய பொதுப் பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- 1992 முதல் 1996 வரை **ஆர்.எம். பாதேவிற்கு** பிறகு UPSC–ஐ தலைமை தாங்கும் இரண்டாவது பெண் ஆவார்.

குறிப்பு

- இந்திய அரசியலமைப்பின் **சரத்து 316–ன் கீழ்** பொதுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் பிற உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவர்.

## BSF–ன் புதிய இயக்குனர்

- சமீபத்தில் எல்லைப் பாதுகாப்புப் படையின் (BSF) புதிய இயக்குனராக தல்ஜித் சிங் சௌதரி நியமிக்கப்பட்டார்.
- இவர் சாஸ்த்ரா சீமா பாலின் (SSB) இயக்குனர் ஜெனரலாக பணியாற்றினார் மேலும் இவருக்கு எல்லைப் பாதுகாப்புப் படையின் (BSF) இயக்குநர் ஜெனரலாக கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

BSF பற்றி

- நிறுவப்பட்டது – 1965
- மத்திய ஆயுதப் போலீஸ் படையின் ஒரு பிரிவாகும்.
- உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

## வங்கதேசத்தில் இந்தியர்களின் பாதுகாப்பை கண்காணிக்க குழு

- வங்கதேசத்தில் உள்ள இந்திய குடிமக்கள், இந்துக்கள் மற்றும் பிற சிறுபான்மையினரின் பாதுகாப்பை உறுதி செய்ய மத்திய அரசு **ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழுவை** நியமித்துள்ளது.
- இக்குழு **மூத்த எல்லைப் பாதுகாப்பு படை (BSF) அதிகாரியால்** வழிநடத்தப்படுகிறது.

**வங்கதேசம் பற்றி**

- தலைநகரம் – டாக்கா
- நாணயம் – வங்கதேச டாகா
- அதிபர் – முகமது ஷஹாபுதீன்

## பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா–நகர்ப்புறம் (PMAY–U) 2.0

- பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா–நகர்ப்புறம் (PMAY–U) 2.0 திட்டத்தை மத்திய அமைச்சரவை சமீபத்தில் அங்கீகரித்துள்ளது.
- **நோக்கம்** – நகர்ப்புற ஏழைகள் மற்றும் நடுத்தர வர்க்க குடும்பங்கள் **ஒரு கோடி** பேருக்கு குறைந்த செலவில் வீடு கட்ட, வாங்க அல்லது வாடகைக்கு எடுக்க நிதி உதவி வழங்குதல்.
- **இலக்கு** – நகர்ப்புற பகுதிகளில் உள்ள அனைத்து தகுதியான பயனாளிகளுக்கும் அனைத்து வானிலைக்கும் ஏற்ற தரமான வீடுகளை வழங்குதல்.
- இத்திட்டத்தின் கீழ் மொத்தம் ₹2.30 லட்சம் கோடி அரசு மானியம் வழங்கப்படும்.
- இதில் மொத்தம் ₹10 லட்சம் கோடி முதலீடு செய்யப்படும்.

## இந்தியாவின் புதிய அமைச்சரவை செயலாளர்

- மத்திய அரசு சமீபத்தில் **டி.வி. சோமநாதனை** புதிய அமைச்சரவை செயலாளராக நியமித்துள்ளது.
- அவர் ராஜீவ் கவுபாவை தொடர்ந்து இப்பதவியை ஏற்கிறார்.

**அமைச்சரவை செயலாளர் பற்றி**

- அமைச்சரவை செயலாளர் இந்திய அரசாங்கத்தின் உயர்நிலை குடிமைப் பணி அதிகாரி ஆவார்.

- அவர் **குடிமைப் பணிகள் வாரியத்தின்** அலுவல் வழி தலைவர் ஆவார்.
- அவர் **இரண்டு ஆண்டு** காலத்திற்கு இப்பதவியில் நீடிப்பார்.
- அவர் இந்திய முன்னுரிமை தரநிலையில் **பதினோராவது இடத்தில்** உள்ளார்.

## தலித் மதமாற்றம் செய்தவர்களுக்கு SC அந்தஸ்து வழங்குவது குறித்த குழு

- **தலித் கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு பட்டியல் சாதி** (SC) அந்தஸ்து வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய அமைக்கப்பட்ட விசாரணை ஆணையம் அக்டோபர் 2024க்குள் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியதால் காலக்கெடு நெருங்கி வருகிறது.

**விசாரணை ஆணையம் பற்றி**

- **உருவாக்கம்** – அக்டோபர் 2022.
- **தலைமை** – கே.ஜி. பாலகிருஷ்ணன்.
- **நோக்கம்** – அரசியலமைப்பு (பட்டியல் சாதிகள்) ஆணை, 1950இல் குறிப்பிடப்பட்டுள்ள மதங்களைத் தவிர வேறு எந்த மதத்திற்கும் மாறிய தலித்துகளுக்கு SC அந்தஸ்து வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல்.

**குறிப்பு**

- தற்போது இந்து, சீக்கிய மற்றும் பௌத்த மதங்களைச் சேர்ந்த தலித்துகள் மட்டுமே பட்டியல் இனங்களாக வகைப்படுத்தப்படுகின்றனர்.

## ஹேமா குழு அறிக்கை

- 2017 நடிகை மீது நடைபெற்ற தாக்குதல் வழக்கிற்கு பதிலளிக்கும் வகையில் பெண்கள் சினிமா கூட்டமைப்பின் (WCC) மனுவைத் தொடர்ந்து மலையாள சினிமாவில் பணிபுரியும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை ஆவணப்படுத்த கேரள அரசு நீதிபதி ஹேமா குழுவை அமைத்தது.
- இதற்கு ஓய்வுபெற்ற கேரள உயர்நீதிமன்ற நீதிபதி கே. ஹேமா தலைமை தாங்குகிறார்.
- 'அதிகார குழு' இருப்பது, கழிவறைகள், உடை மாற்றும் அறைகள், பாதுகாப்பான போக்குவரத்து போன்ற அத்தியாவசிய வசதிகள் இல்லாதது போன்ற பிரச்சினைகளை இந்த அறிக்கை எடுத்துக்காட்டியது.

வெற்றி I.A.S. கல்வி மையம்



# 2. அரசியல் அறிவியல்

## 2.1 இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை

### இந்தியா மற்றும் நேபாளம்

- இந்தியாவும் நேபாளமும் இணைந்து நேபாளத்தின் முனல் செயற்கைக்கோளை ஏவுவதற்கான மானிய உதவி வழங்க புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன.
- இந்த கூட்டுறவு இராஜதந்திரத்தில் விண்வெளி தொழில்நுட்பத்தின் வளர்ந்து வரும் பங்கை எடுத்துக்காட்டுகிறது.

**முனல் செயற்கைக்கோள் பற்றி**

- முனல் செயற்கைக்கோள் நேபாளத்தில் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட செயற்கைக்கோள் ஆகும், இது பூமியின் மேற்பரப்பின் தாவர அடர்த்தி தரவுத்தளத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த செயற்கைக்கோள் நியூ ஸ்பேஸ் இந்தியா லிமிடெட் (NSIL) இன் துருவ செயற்கைக்கோள் ஏவு வாகனத்தைப் பயன்படுத்தும்.

**நேபாளம் பற்றி**

- தலைநகரம் – காட்மாண்டு
- நாணயம் – நேபாள ரூபாய்
- அதிபர் – ராம் சந்திர பௌடெல்

### இந்தியா – மாலத்தீவுகள்

- வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மாலத்தீவுகளுக்கான பயணத்தை முடித்து நாடு திரும்பினார்.
- மாலத்தீவுகளில் ஒருங்கிணைந்த பணவழங்கீட்டு இடைமுகம் (UPI) அறிமுகப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- அடு மீட்பு மற்றும் கரை பாதுகாப்புத் திட்டம் மற்றும் அடு சுற்றுவழித் தொடர்பு பாலத்திட்டத்தை இரு நாடுகளும் கூட்டாக துவக்கி வைத்தன.

**குறிப்பு**

- மாலத்தீவுகளின் முக்கியத்துவம்
- இந்தியாவின் கடல்சார் அண்டை நாடு.
- 'முதலில் அண்டை நாடு ' கொள்கையின் முக்கிய கூட்டாளர் நாடாகும்.
- பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான இந்தியாவின் 'SAGAR' பார்வையின் முக்கிய கூட்டாளர் நாடாகும்.

**மாலத்தீவுகள் பற்றி**

- தலைநகரம்: மாலே
- நாணயம்: மாலத்தீவு ரூஃபியா
- அதிபர்: முகமது முய்சு

### இந்தியா – போலந்து

- பிரதமர் நரேந்திர மோடி **போலந்து மற்றும் உக்ரைனுக்கு** மூன்று நாள் பயணம் மேற்கொண்டார்.
- **45 ஆண்டுகளில்** முதல் முறையாக ஒரு இந்திய பிரதமர் போலந்து நாட்டிற்கு பயணம் மேற்கொண்டிருக்கிறார் .

VETRII I.A.S. STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

- மொரார்ஜி தேசாய் 1979இல் போலந்தைப் பார்வையிட்டார்.
- **இந்தியா மற்றும் போலந்து இடையேயான** இராஜதந்திர உறவுகள் 1954இல் முறையாக நிறுவப்பட்டன.

போலந்து பற்றி

- **தலைநகரம்** – வார்சா
- **நாணயம்** – போலிஷ் ஸ்லோட்டி
- **பிரதமர்** – டொனால்ட் டஸ்க்

### '2+2' பேச்சுவார்த்தை

- சமீபத்தில் புது டில்லியில் **மூன்றாவது ஜப்பான்–இந்திய 2+2 வெளியுறவு மற்றும் பாதுகாப்பு** அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது.
- இரு நாடுகளும் **'இந்தோ–பசிபிக் மீதான ஆசியான் பார்வைக்கு (AOIP)'** முழு ஆதரவை வெளிப்படுத்தின.
- AOIP வெளிப்படைத்தன்மை, உள்ளடக்கம், விதிகள் அடிப்படையிலான கட்டமைப்பு மற்றும் சர்வதேச சட்டத்திற்கு மதிப்பளித்தல் போன்ற கொள்கைகளை கடைப்பிடிக்கிறது.

குறிப்பு

- இந்தியா மற்றும் ஜப்பான் இடையேயான முதல் இருதரப்பு விமானப்படை பயிற்சி **'வீர் கார்டியன் 2023'** சென்ற ஆண்டு நடத்தப்பட்டது.

## 2.2 பொது விழிப்புணர்வு மற்றும் பொதுக் கருத்து

### ராஜ்யசபா தேர்தல்

- செப்டம்பர் 3 அன்று 12 **ராஜ்யசபா இடங்களுக்கான தேர்தல்** நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

குறிப்பு

- அரசியலமைப்பின் 80வது பிரிவின் கீழ், ஒவ்வொரு மாநிலத்தின் ராஜ்யசபா பிரதிநிதிகளும் அவர்களது சட்டமன்ற உறுப்பினர்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- உறுப்பினர் எண்ணிக்கை 245 (233 தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் + 12 நியமிக்கப் பட்டவர்கள்)

### பட்ஜெட் கூட்டத்தொடர் முடிவு

- பட்ஜெட் கூட்டத்தொடருக்குப் பிறகு நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டன.
- இந்த கூட்டத்தொடரில் பன்னிரெண்டு மசோதாக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- இந்த கூட்டத்தொடரில் மக்களவையில் நிறைவேற்றப்பட்ட **நான்கு மசோதாக்கள்:**
- நிதி மசோதா, 2024
- ஒதுக்கீட்டு மசோதா, 2024
- ஜம்மு காஷ்மீர் ஒதுக்கீட்டு மசோதா, 2024
- பாரதீய வாயுயான் விதேயக் மசோதா, 2024

குறிப்பு

- காலவரையின்றி ஒத்திவைப்பு என்பது நாடாளுமன்றத்தின் அமர்வை ஒரு குறிப்பிடப்படாத காலத்திற்கு முடிவுக்குக் கொண்டு வருவதாகும்.
- காலவரையின்றி ஒத்திவைக்கும் அதிகாரம் அவையின் தலைமை அதிகாரியிடம் உள்ளது

வெற்றி I.A.S. கல்வி மையம்

# 2.3 மத்திய அரசாங்கம் – பொதுநலம் சார்ந்த அரசு திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

## தேசிய தொழில்பழகுநர் மற்றும் பயிற்சித் திட்டம் (NATS)

- கல்வி அமைச்சகம் **தேசிய தொழில்பழகுநர் மற்றும் பயிற்சித் திட்டம்** (NATS) 2.0 இணையதளத்தை தொடங்கியுள்ளது.
- இந்த முன்முயற்சியின் ஒரு பகுதியாக, நேரடி ரொக்கப் பரிமாற்றத் திட்டத்தின் (DBT) மூலம் இளம் பட்டதாரிகள் மற்றும் டிப்ளமோ படித்தவர்களுக்கு ரூ.100 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

NATS பற்றி

- **தொழில்பழகுநர் சட்டம், 1961** இன் கீழ் தொடங்கப்பட்டது
- நோக்கம் – **இந்திய இளைஞர்களுக்கு** திறன் மேம்பாடு அளித்தல்
- இத்திட்டத்தின் கீழ் தொழில்பழகுநர்களுக்கு நிறுவனங்களால் அவர்களின் பணியிடத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## பெண்கள் தொழில்முனைவோர் திட்டம்

- தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (NSDC) சமீபத்தில் **பெண்கள் தொழில்முனைவோர் திட்டத்தை** அறிமுகப்படுத்தியது.
- **இது 25 லட்சம் பெண் தொழில்முனைவோருக்கு திறன், அறிவு, வளங்கள் மற்றும் நிதி மானியங்கள் போன்றவற்றை** வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**பெண் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்கான பிற முயற்சிகள்**

- **முத்ரா கடன்கள்:** பெண்களுக்கு 10 லட்சம் வரையிலான கடனுக்கு பிணை தேவையில்லை.
- **ஸ்டாண்ட்–அப் இந்தியா:** பெண் தொழில்முனைவோருக்கு நிதியுதவி திட்டமாகும்.
- TN–RISE முயற்சி: கிராமப்புற பெண் தொழில்முனைவோர் அரசாங்கம் மற்றும் அதன் திட்டங்களை அணுக வழிவகை செய்தல்.

## நிர்பயா நிதி

- மத்திய அரசு சமீபத்தில் 2023–24 நிதியாண்டிற்கான நிர்பயா நிதிக்கு ₹7,212 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

**நிர்பயா நிதி பற்றி**

- **தொடக்கம்** – 2013.
- நாட்டில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை செயல்படுத்துவதற்காக இது உருவாக்கப்பட்டது.
- **இது நிதி அமைச்சகத்தால்** நிர்வகிக்கப்படும் காலாவதியாகாத நிதியாகும்.
- முதன்மை அமைச்சகம்: **பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்** (MWCD).

## தூய்மையான தாவர திட்டம் (Clean Plant Programme – CPP)

- தூய்மையான தாவர திட்ட முன்முயற்சியை மத்திய அமைச்சரவை சமீபத்தில் அங்கீகரித்தது.
- இந்த முன்முயற்சியை **வேளாண்மை அமைச்சகம்** முன்மொழிந்துள்ளது.
- **நோக்கம்** – விவசாயிகளுக்கு வைரஸ் இல்லாத, உயர்தர நடவுப் பொருட்களை வழங்குதல்.
- **நன்மைகள்** – அதிகரித்த பயிர் மகசூல் மற்றும் விவசாயிகளுக்கு மேம்படுத்தப்பட்ட வருமான வாய்ப்புகள்.
- இத்திட்டத்தில் ₹1,765.67 கோடி முதலீடு செய்யப்படவுள்ளது.

## பிரதமரின் JI-VAN திட்டம்

- மத்திய அமைச்சரவை பிரதமரின் JI-VAN (Jaiv Indhan- Vatavaran Anukool fasal awashesh Ni-varan) திட்டத்தை **2028-29 வரை ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்க ஒப்புதல் அளித்துள்ளது.**
- இது நாட்டின் மேம்பட்ட உயிரி எரிபொருள் துறையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முக்கிய முயற்சியாகும்.
- இது 2070க்குள் இந்தியாவின் பசுமை இல்ல வாயு உமிழ்வு இல்லாத இலக்குகளுடன் ஒத்துள்ளது மற்றும் மேக் இன் இந்தியா முயற்சிக்கு ஆதரவளிக்கிறது.
- இது உபரி உயிரித்திரள் மற்றும் விவசாய கழிவுகளிலிருந்து 2வது தலைமுறை (2G) எத்தனால் உற்பத்தியில் கவனம் செலுத்துகிறது.
- இது முதலில் மார்ச் 2019இல் தொடங்கப்பட்டது.

## மாதிரி சூரிய கிராமத் திட்டத்திற்கான வழிகாட்டுதல்கள் வெளியீடு

- சமீபத்தில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE) பிரதமர் சூர்ய கர்: **முஃப்ட் பிஜிலி யோஜனா திட்டத்தின் கீழ் மாதிரி சூரிய கிராமத்திட்டத்தை** செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

மாதிரி சூரிய கிராமத் திட்டம் பற்றி

- நோக்கம் – நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாதிரி சூரிய கிராமத்தை உருவாக்குதல்.

பிரதமர் சூர்ய கர்: முஃப்ட் பிஜிலி யோஜனா பற்றி

- நோக்கம் – ஒரு கோடி குடும்பங்களுக்கு ஒவ்வொரு மாதமும் 300 யூனிட்கள் வரை இலவச மின்சாரம் வழங்குதல்.

## ஜியோ பார்சி திட்டத்திற்கான இணையதளம்

- ஜியோ பார்சி திட்டத்திற்கான **இணையதளத்தை** மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தொடங்கி வைத்தார்.
- இது ஒரு மத்திய **அரசின் நிதியுதவித் திட்டமாகும்.**
- நோக்கம் – இந்தியாவில் பார்சி சமூகத்தின் மக்கள்தொகை குறைவை தடுப்பது ஆகும்.

குறிப்பு

- 2011 இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 57,264 பார்சிகள் உள்ளனர்.

## PM-KUSUM திட்டம்

- **பிரதான் மந்திரி-கிசான் உர்ஜா சுரக்ஷா எவம் உத்தான் மகாபியான்** (PM-KUSUM) திட்டத்தின் செயலாக்கத்தை மேம்படுத்த மாநிலங்கள் மாற்று அணுகுமுறைகளை சோதித்து வருகின்றன.
- விவசாயிகளுக்கு சொந்தமான நிலங்களில் 14 லட்சம் சூரிய மின் பம்புகளை நிறுவுவதன் மூலம் **100 ஜிகாவாட் சூரிய மின் நிலையங்களை அமைப்பதை** இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும், மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட 35 லட்சம் விவசாய பம்புகளை சூரிய ஆற்றலுக்கு மாற்றுவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- PM-KUSUM திட்டத்தை மீண்டும் உயிர்ப்பிக்க டிஜிட்டல் தளம் அறிமுகப்படுத்தப்படும்.

PM-KUSUM திட்டம் பற்றி

  - தொடக்கம் – 2019
  - நோக்கம் – நாட்டின் சூரிய நீர் பம்பு உற்பத்தித் திறனை அதிகரித்தல்.

## பூச்சிகளை நிர்வகிக்க செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கண்காணிப்பு அமைப்பு

- மத்திய அரசு செயற்கை நுண்ணறிவு (AI) உந்துசக்தி கொண்ட **தேசிய பூச்சி கண்காணிப்பு அமைப்பை** (NPSS) அறிமுகப்படுத்தியது.
- நோக்கம் – பூச்சிகளைக் கட்டுப்படுத்த விவசாயிகள் கைபேசி மூலம் வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் நிபுணர்களுடன் தொடர்பு கொள்ள உதவுதல்.

வெற்றி I.A.S. கல்வி மையம்

- இது அதிகப்படியான பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவும்.

## தேசிய தூய்மை கங்கை திட்டம் (NMCG)

- இத்திட்டத்தின் கீழ் பல்வேறு மாநிலங்களில் செயல்படுத்தப்படும் நதி சுத்திகரிப்பு திட்டங்களின் தாமதம் குறித்து NMCG தலைவர் வருத்தம் தெரிவித்தார்.

NMCG பற்றி

- **தொடக்கம்** – ஆகஸ்ட் 12, 2011.2. நோக்கம் – கங்கை நதியின் மாசுபாட்டை திறம்பட தடுத்தல் மற்றும் புத்துயிர் அளித்தல்.
- **தேசிய கங்கை நதி வடிநிலப்பகுதி ஆணையத்தின்** (NGRBA) செயல்படுத்தும் பிரிவாகும்
- இரண்டு அடுக்கு அமைப்பு – ஆளுமை குழு மற்றும் நிர்வாகக் குழு.

## மின்துறைக்கான இணையதளம்

- **மத்திய மின்துறை அமைச்சர் மனோகர் லால் கட்டார்** புது டில்லியில் மின்துறையின் திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்த மூன்று இணையதளங்களைத் தொடங்கினார்.
- **திட்டங்களை இணைய வழியில் கண்காணிப்பதற்கான இணையதளம் – அனல் மின்** (PROMPT): அனல் மின் திட்டங்களின் நிகழ்நேர கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வுக்கு உதவுகிறது.
- **மின்துறைக்கான பேரிடர் தாங்கும் உள்கட்டமைப்பு** (DRIPS): அனைத்து பங்குதாரர்களுக்கும் ஒரே தொடர்பு புள்ளியாக செயல்படுகிறது.
- JAL VIDYUT DPR: நிகழ்நேர கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வு.
- இந்த இணையதளங்கள் **2047க்குள் விக்சித் பாரத்** இலக்கை அடைய இந்தியாவுக்கு உதவுகின்றன.

## பொது பயிர் மதிப்பீட்டு ஆய்வு (DGCES)

- மத்திய அரசு சமீபத்தில் **பொது பயிர் மதிப்பீட்டு ஆய்வை** (DGCES) நாடு முழுவதும் செயல்படுத்துவதாக அறிவித்துள்ளது.
- **நோக்கம்** – வேளாண் புள்ளிவிவரங்களின் துல்லியம், நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவது, இது கொள்கை உருவாக்கம், வர்த்தக முடிவுகள் மற்றும் வேளாண் திட்டமிடலுக்கு உதவும்.
- **டிஜிட்டல் பயிர் ஆய்வு** நடத்த போவதாக மத்திய அரசு பட்ஜெட்டில் அறிவித்தது, இது துல்லியமான பயிர் பரவல் மதிப்பீட்டிற்கு உதவும் என்று கூறியது.
- இந்த ஆய்வு மறுசீரமைக்கப்பட்ட FASAL (**விண்வெளி, வேளாண்–வானிலை மற்றும் நிலம் சார்ந்த அவதானிப்புகளைப் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை முன்கணிப்பது**) மூலம் மேற்கொள்ளப்படும்.

## லட்சபதி திதி சம்மேளன்

- பிரதமர் திரு.நரேந்திர மோடி மகாராஷ்டிராவின் ஜல்கானில் லட்சபதி திதி சம்மேளனத்தை முன்னிட்டு உரையாற்றினார்.
- அவர் 11 லட்சம் புதிய லட்சபதி தீதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தார்.

குறிப்பு

- லட்சபதி திதி என்பவர் ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் அல்லது அதற்கு மேல் குடும்ப வருமானம் ஈட்டும் சுய உதவிக் குழு (SHG) உறுப்பினர் ஆவார்.
- லட்சபதி திதி என்பது தீனதயாள் அந்த்யோதயா யோஜனா – தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் (DAY–NRLM) விளைவாகும், இது தனி திட்டம் அல்ல.
- DAY–NRLM என்பது ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் (MoRD) முதன்மைத் திட்டமாகும்

வெற்றி I.A.S. கல்வி மையம்

- நோக்கம் – ஏழைகளுக்கான வலுவான நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம் வறுமையை குறைப்பதை ஊக்குவிப்பது.

## விஞ்ஞான் தாரா

- சமீபத்தில், மத்திய அமைச்சரவை மூன்று இணைப்பு திட்டங்களை 'விஞ்ஞான் தாரா' என்ற ஒருங்கிணைந்த மத்திய துறை திட்டமாக இணைத்தது.
- இது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் (DST) செயல்படுத்தப்படுகிறது.

**விஞ்ஞான் தாரா திட்டம் பற்றி**

- **நோக்கம்**: நாட்டின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க சூழலமைப்பை வலுப்படுத்தும் நோக்கில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப (S&T) திறன் மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டை ஊக்குவிப்பது.

**3–பரந்த கூறுகள்**

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப (S&T) நிறுவன மற்றும் மனித திறன் மேம்பாடு
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு
- புத்தாக்கம், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் பரவல்

## பிரதமர் JANMAN திட்டம்

- மத்திய பழங்குடியினர் விவகார அமைச்சகம் பிரதமர்–JANMAN திட்டத்திற்காக தேசிய அளவிலான தகவல், கல்வி மற்றும் தொடர்பு (IEC) பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- பிரதான் மந்திரி ஜனஜாதி ஆதிவாசி நியாய மஹா அபியான் (PM–JANMAN) திட்டத்தின் அணுகல் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

**PM JANMAN பற்றி**

- **தொடக்கம்** – நவம்பர் 15, 2023.
- **நோக்கம்** – 3 ஆண்டுகளில் PVTG குடும்பங்கள் மற்றும் வாழ்விடங்களுக்கு பாதுகாப்பான வீடு, சுத்தமான குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளை வழங்குதல்.
- 18 மாநிலங்கள் மற்றும் 1 யூனியன் பிரதேசத்தில் வசிக்கும் 75 PVTG சமூகங்களை உள்ளடக்குவதை இது இலக்காக கொண்டுள்ளது.

## (PM–WAN

- TRAI இன் படி, 2024 ஜூலை நிலவரப்படி நாட்டில் 2,07,642 PM–WANI வை–ஃபை ஹாட்ஸ்பாட்கள் நிறுவப்பட்டுள்ளன.
- 2022க்குள் 1 கோடி பொது வை–ஃபை ஹாட்ஸ்பாட்கள் மற்றும் 2030க்குள் 5 கோடி ஹாட்ஸ்பாட்கள் என்ற இலக்கிலிருந்து நாம் வெகு தொலைவில் இருக்கிறோம் .

**PM–WANI பற்றி**

- 2020 இல் தொலைத்தொடர்புத் துறையால் தொடங்கப்பட்டது.
- நோக்கம் – நாட்டில், குறிப்பாக கிராமப்புற பகுதிகளில், வலுவான டிஜிட்டல் தகவல் தொடர்பு உள்கட்டமைப்பை உருவாக்க பொது வைஃபை ஹாட்ஸ்பாட்களின் பெருக்கத்தை மேம்படுத்துதல்.

## ஷீ–பாக்ஸ் இணையதளம்

- மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் பெண்களுக்கான பணியிடங்களை பாதுகாப்பானதாக்க ஒரு புதிய ஷீ பாக்ஸ் இணையதளத்தை அறிமுகப்படுத்தியது.

**ஷீ–பாக்ஸ் இணையதளம் பற்றி**

- இது பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் புகார்களை பதிவு செய்யவும் கண்காணிக்கவும் ஒரு மையப்படுத்தப்பட்ட தளமாகும்.
- **நோக்கம்**: பாலியல் துன்புறுத்தல் தொடர்பான புகார்களை பதிவு செய்ய ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒற்றை சாளர அணுகலை வழங்குதல்.

வெற்றி I.A.S. கல்வி மையம் VETRII I.A.S. STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2014 வெற்றி I.A.S. கல்வி மையம்

## வாத்வான் துறைமுகம்

- பிரதமர் சாகர்மாலா திட்டத்தின் கீழ் வாத்வான் துறைமுகத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- வாத்வான் துறைமுகத்தை ஒரு பெரிய துறைமுகமாக அமைக்க 2015–ல் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இது மகாராஷ்டிராவின் மூன்றாவது பெரிய துறைமுகமாக இருக்கும்.
- ஜவஹர்லால் நேரு துறைமுக ஆணையமும் (JNPA) மகாராஷ்டிரா கடல்சார் வாரியமும் இணைந்து இந்த துறைமுகத்தை செயல்படுத்தும்.
- இது நாட்டின் மிகப்பெரிய கொள்கலன் துறைமுகமாகவும், இந்தியாவின் மிகப்பெரிய ஆழ்கடல் துறைமுகங்களில் ஒன்றாகவும் இருக்கும்.

குறிப்பு

- இந்தியாவில் 12 பெரிய மற்றும் 200 சிறிய துறைமுகங்கள் உள்ளன.
- இந்தியாவின் வர்த்தகத்தில் அளவில் 95% மதிப்பில் 70% கடல்வழி போக்குவரத்து மூலம் நடைபெறுகிறது.

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

# 3.புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல்

### இயற்கை பேரிடர்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்

**வயநாட்டில் நிலச்சரிவு**

- கனமழை காரணமாக மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள வயநாடு மாவட்டத்தில் தொடர் நிலச்சரிவு ஏற்பட்டன.
- இந்த பெரிய மண்சரிவுகளில் பலர் உயிரிழந்தனர்.

**நிலச்சரிவை தடுப்பதற்கான முக்கிய உத்திகள்**

- தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் (NDMA) தேசிய நிலச்சரிவு அபாய மேலாண்மை உத்தி (2019)
- தேசிய நிலச்சரிவு பாதிப்பு வரைபடமாக்கல் (NLSM) திட்டம்
- நிலச்சரிவு அபாய தணிப்பு திட்டம் (LRMS)
- நிலச்சரிவுகள் மற்றும் பனிச்சரிவுகள் குறித்த தேசிய வழிகாட்டுதல்கள்
- இந்தியாவின் நிலச்சரிவு அட்லஸ்

### நான்கு வளையங்களை உடைய பட்டாம்பூச்சி

- நான்கு வளையங்களை உடைய பட்டாம்பூச்சி 61 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் மீண்டும் தென்பட்டுள்ளதாக ஒரு புதிய ஆய்வு கண்டறிந்துள்ளது.
- இந்த பட்டாம்பூச்சி 2018ல் நம்தாபா தேசிய பூங்காவில் பதிவு செய்யப்பட்டது.
- யப்திமா (Ypthima) என்பது Nymphalidae குடும்பத்தின் வளமான இனமாகக் கருதப்படுகிறது, இதில் சுமார் 6,000 வகையான பட்டாம்பூச்சிகள் உள்ளன.
- இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட 35 யப்திமா இனங்களில், 23 வடகிழக்கில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளன.

வெற்றி I.A.S. கல்வி மையம்

### மேக வெடிப்புகள்

- மேக வெடிப்புகளைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு ஹிமாச்சல பிரதேசத்தில் பரவலான சேதத்தை ஏற்படுத்தியது.
- மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் அறிக்கையின்படி, சமீபத்தில் குல்லு, மண்டி மற்றும் சிம்லா பகுதிகளில் மேக வெடிப்பு நிகழ்வு பதிவாகியுள்ளது.

**மேக வெடிப்புகள் பற்றி**

- குறுகிய காலத்தில் வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியில் அதிக மழைப்பொழிவைக் குறிக்கிறது.
- சுமார் 20 முதல் 30 சதுர கி.மீ புவியியல் பகுதியில் மணிக்கு 100 மில்லி மீட்டருக்கு மேல் பெய்யும் எதிர்பாராத மழைப்பொழிவு மேக வெடிப்பாக வகைப்படுத்தப்படலாம்.

### மூன்று புதிய ராம்சார் தளங்கள்

- இந்தியா மேலும் மூன்று ஈரநிலங்களை ராம்சார் தளங்களின் பட்டியலில் சேர்த்துள்ளது.
  - நஞ்சராயன் பறவைகள் சரணாலயம் – திருப்பூர், தமிழ்நாடு
  - கழுவேலி பறவைகள் சரணாலயம் – விழுப்புரம், தமிழ்நாடு
  - தவா நீர்த்தேக்கம் – மத்திய பிரதேசம்

**ராம்சார் தளங்கள் பற்றி**

- ராம்சார் உடன்படிக்கை ஏற்பு – பிப்ரவரி 2, 1971.
- மொத்த ராம்சார் தளங்களின் எண்ணிக்கை – 85
- இது 1358068 ஹெக்டேர் பரப்பளவை உள்ளடக்கியுள்ளது.

## இயற்கை பேரிடர்கள் – பாதுகாப்பு நடவடிக்கைகள்

- **தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம்** (NDMA) அவற்றிலிருந்து ஏற்படும் அபாயத்தைக் குறைக்க தணிப்பு நடவடிக்கைகளுக்காக 189 **"அதிக ஆபத்துள்ள"** பனிப்பாறை ஏரிகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது .
- **இமயமலையில்** பனிப்பாறை ஏரிகள் நிரம்பி வழிவதால் ஏற்பட்ட பேரழிவுகளைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.

குறிப்பு

- கடந்த அக்டோபரில், சிக்கிமில் உள்ள தெற்கு லோனாக் ஏரி, (ஒரு பனியாறு உருவாக்கிய ஏரி) நிரம்பி வழிந்து **சிக்கிமின்** பல பகுதிகளை வெள்ளத்தில் மூழ்கடித்தது.
- **தேசிய பனிப்பாறை ஏரி வெடிப்பு வெள்ள ஆபத்து தணிப்பு திட்டத்திற்கு** மத்திய அரசு **ஜூலை 25, 2024** அன்று ஒப்புதல் அளித்தது.

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்



# 4. பொருளாதாரம்

## 4.1 அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### மின்வெட்டு அதிகரிப்பு

- கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் (பெர்க்லி) இந்திய எரிசக்தி மற்றும் காலநிலை மையத்தின் ஆய்வறிக்கையின்படி, இந்தியாவின் அதிகரித்து வரும் மின்சார தேவைகள் **2027ஆம் ஆண்டளவில்** போதுமான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதரவு இல்லாததால் மாலை நேர மின்வெட்டுகளை அதிகரிக்கக்கூடும்.
- **இந்தியாவில் 446 GW மின் உற்பத்தி திறன்** உள்ளது, இதில் 211 GW நிலக்கரியில் இருந்தும், 195 GW புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களில் இருந்தும், மீதமுள்ளவை எரிவாயு மற்றும் அணு ஆற்றலில் இருந்தும் வருகிறது.
- எனினும் இந்த திறன் அனைத்தும் எப்போதும் கிடைப்பதில்லை, இதன் விளைவாக மின்வெட்டுகள் ஏற்படுகின்றன.

### ரெப்போ விகிதம்

- பணவியல் கொள்கைக் குழு (MPC) ரெப்போ விகிதத்தை **6.5 சதவீதமாக** தொடர்ந்து ஒன்பதாவது முறையாக மாற்றாமல் வைத்துள்ளது.
- **'பண அளிப்பை விரிவாக்கும்'** பணவியல் கொள்கை நிலைப்பாட்டை பராமரிக்கவும் MPC குழு முடிவு செய்துள்ளது.

MPC குழு பற்றி

- இந்தக்குழு திருத்தப்பட்ட RBI சட்டம், 1934 இன் பிரிவு 45ZB இன் கீழ் உருவாக்கப்பட்டது.
- MPCன் முதல் கூட்டம் – செப்டம்பர் 29, 2016.
- குறைவெண் – 4 உறுப்பினர்கள்
- உறுப்பினர்கள் – 6 (3 – RBI, 3 – மத்திய அரசு)
- தலைவர் – இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் (சக்திகாந்த தாஸ்)

குறிப்பு

- வணிக வங்கிகள் கடன் வாங்கும்போது ரிசர்வ் வங்கி விதிக்கும் வட்டி விகிதம் ரெப்போ விகிதம் எனப்படும்.

### NIRF தரவரிசை 2024

- கல்வி அமைச்சகம் சமீபத்தில் தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு (NIRF) 2024 ஐ அறிவித்தது.
- இந்த ஒன்பதாவது பதிப்பில், மூன்று புதிய பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன – திறந்தநிலை பல்கலைக்கழகங்கள், திறன் பல்கலைக்கழகங்கள் மற்றும் மாநில நிதியுதவி பெறும் அரசு பல்கலைக்கழகங்கள்.

முன்னணி நிறுவனங்கள்

- ஒட்டுமொத்த பிரிவில் IIT மெட்ராஸ் தொடர்ந்து **ஆறாவது ஆண்டாக முதலிடத்தை** தக்க வைத்துக் கொண்டது.
- பல்கலைக்கழகம் – IISc பெங்களூரு

வெற்றி I.A.S. கல்வி மையம்

- பொறியியல் – IIT மெட்ராஸ்
- மேலாண்மை – IIM அகமதாபாத்
- மருத்துவம் – AIIMS டெல்லி
- பல் மருத்துவம் – சாவித்ரா மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனம், சென்னை மற்றும் மணிப்பால் பல் மருத்துவக் கல்லூரி
- சட்டம் – தேசிய சட்டப் பள்ளி இந்திய பல்கலைக்கழகம், பெங்களூர்

NIRF பற்றி

- தொடக்கம் – 2015
- இது இந்திய அரசாங்கத்தால் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை தரவரிசைப்படுத்த பயன்படுத்தப்படும் ஒரு முறையாகும்.
- **ஐந்து அளவுருக்களின் அடிப்படையில்**
    - கற்பித்தல், கற்றல் மற்றும் வளங்கள்
    - ஆராய்ச்சி மற்றும் தொழில்முறை பயிற்சி
    - பட்டப்படிப்பு முடிவு
    - வெளியீடு மற்றும் உள்ளடக்கம்
    - கருத்து
- பிரிவுகள் – 16

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

# 5. அறிவியல்




## 5.1 விண்வெளி

### EOS–08 வெற்றிகரமாக ஏவப்பட்டது

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் சமீபத்தில் EOS–08 புவி கண்காணிப்பு செயற்கைக்கோளை ஏவியது.
- இது ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள **சதீஷ் தவான் விண்வெளி மையத்தில்** (SDSC) **இருந்து சிறிய செயற்கைக்கோள் ஏவுகலம்** (SSLV–D3) மூலம் ஏவப்பட்டது.
- இந்த தரவுகள் விவசாயம், நீர் வளங்கள், நகர்ப்புற திட்டமிடல், ஊரக மேம்பாடு, கனிம ஆய்வு, சுற்றுச்சூழல், வனவியல், கடல் வளங்கள் மற்றும் பேரிடர் மேலாண்மை உள்ளிட்ட பல பயன்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படும்.
- இஸ்ரோ பற்றி
  - உருவாக்கம் – **ஆகஸ்ட் 15, 1969**
  - தலைமையகம் – **பெங்களூரு**
  - தலைவர் – **எஸ். சோமநாத்**

வெற்றி I.A.S. கல்வி மையம்

# 6 தினசரி தேசிய நிகழ்வு



## 8 தேசிய அதிவேக சாலை வழித்தட திட்டங்கள்

- மத்திய அமைச்சரவை சமீபத்தில் 8 தேசிய அதிவேக சாலை வழித்தட திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தது.
- இந்த திட்டங்கள் மொத்தம் 936 கி.மீ நீளம் கொண்டவை மற்றும் மொத்த மூலதன செலவு ரூ.50,655 கோடி ஆகும்.
- முக்கிய திட்டங்கள்
    - ஆக்ரா–குவாலியர்
    - காரக்பூர்–மோரேக்ராம்
    - தாராட்–அகமதாபாத்
    - அயோத்தி ரிங் சாலை
    - ராய்ப்பூர்–ராஞ்சி
    - கான்பூர் ரிங் சாலை
    - கவுகாத்தி ரிங் சாலை
    - நாசிக்–கேட்

## சர்வதேச விவசாய பொருளாதார வல்லுநர்கள் மாநாடு (ICAE)

- பிரதமர் நரேந்திர மோடி 32வது சர்வதேச விவசாய பொருளாதார வல்லுநர்கள் மாநாட்டை தொடங்கி வைத்தார்.
- 70 நாடுகளைச் சேர்ந்த சுமார் 1,000 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர்.
- இந்தியாவில் முதல் சர்வதேச விவசாய பொருளாதார வல்லுநர்கள் மாநாடு (ICAE) 1958ல் மைசூரில் ஜவஹர்லால் நேரு காலத்தில் நடைபெற்றது.
- இப்போது, 65 ஆண்டுகளுக்குப் பிறகு இது இந்தியாவில் நடைபெறுகிறது.

குறிப்பு

- இந்தியா இப்போது உணவு உற்பத்தியில் உபரி நாடாக மாறியுள்ளது.
- இந்தியா பால், பருப்பு வகைகள் மற்றும் மசாலா பொருட்களின் முன்னணி உற்பத்தியாளராகவும், உணவு தானியங்கள், பழங்கள், காய்கறிகள், பருத்தி, சர்க்கரை மற்றும் தேயிலையின் இரண்டாவது பெரிய உற்பத்தியாளராகவும் உருவெடுத்துள்ளது.

## உயிருள்ள மனித உறுப்புகளின் போக்குவரத்துக்கான வழிகாட்டுதல்கள்

- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் உயிருள்ள மனித உறுப்புகளின் போக்குவரத்துக்கான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.அவை,
- விமானத்தில் உறுப்புகளை கொண்டு செல்லும்போது, உறுப்பு வைக்கப்பட்டுள்ள பெட்டியை திறக்காமல் ஸ்கிரீனிங் செய்ய வேண்டும்.
- உறுப்பு பெட்டியை கொண்டு செல்லும்/உடன் செல்லும் ஊழியர்களுக்கு விமானத்திலிருந்து இறங்குவதில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

குறிப்பு

- மனித உறுப்புகள் மற்றும் திசுக்கள் மாற்று சட்டம், 1994, உயிருடன் உள்ள தானம் செய்பவர்களிடமிருந்து அல்லது மூளைச்சாவு அடைந்த நோயாளிகளிடமிருந்து குடும்ப

வெற்றி I.A.S. கல்வி மையம்

உறுப்பினர்களின் ஒப்புதலுடன் உறுப்புகளை பெற அனுமதிக்கிறது.

## 8 புதிய ரயில் திட்டங்கள்

- மத்திய அமைச்சரவை சமீபத்தில் ₹24,657 கோடி மதிப்பீட்டில் **எட்டு புதிய ரயில்வே திட்டங்களை** அங்கீகரித்தது.
- **நோக்கம்** – இணைப்பை வழங்குதல், பயண வசதியை எளிதாக்குதல், தளவாடச் செலவுகளைக் குறைத்தல், எண்ணெய் இறக்குமதியைக் குறைத்தல் மற்றும் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வைக் குறைத்தல்.
- பயன் – இது ரயில்வேயின் தற்போதைய வலையமைப்பை **900 கி.மீ அதிகரிக்கும்.**
- இத்திட்டம் **2030–31க்குள் முடிக்கப்படும்** என எதிர்பார்க்கப்படுகிறது.
- இத்திட்டங்கள் **ஏழு மாநிலங்களில் உள்ள 14 மாவட்டங்களை** உள்ளடக்கியுள்ளன

## அதிக மகசூல் தரும் 109 பயிர் வகைகள் அறிமுகம்

- இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் 61 பயிர்களின் அதிக மகசூல் தரும், காலநிலை தாங்கும் திறனுள்ள மற்றும் உயிர்–வளப்படுத்தப்பட்ட **109 பயிர் வகைகளை பிரதமர் நரேந்திர மோடி** அறிமுகப்படுத்தினார்.
- இவற்றில் 34 வயல் பயிர்களும், 27 தோட்டக்கலை பயிர்களும் அடங்கும்.
- இந்த பயிர்கள் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ICAR) மூலம் உருவாக்கப்பட்டவை.
- பரந்த தகவமைப்புத் திறனும் அதிக மகசூலும் கொண்ட புதிய பயிர் வகைகளையும்
- கலப்பினங்களையும் உருவாக்க பயிர்–மேம்பாட்டுத் திட்டத்தை ICAR நடத்தி வருகிறது.

## உலக தெற்கு நாடுகளின் உச்சி மாநாடு (VOGSS)

- இந்தியா சமீபத்தில் **3வது உலக தெற்கு நாடுகளின் உச்சி மாநாட்டை** (VOGSS) நடத்தியது.
- VOGSS **உலக நாடுகளை** ஒன்றிணைக்க முயல்கிறது.
- கருப்பொருள்: "An Empowered Global South for a Sustainable Future".

குறிப்பு

- உலகளாவிய தெற்கு நாடுகள் என்பது "வளரும்," "குறைவாக வளர்ந்த" அல்லது "வளர்ச்சி குன்றிய" என விவரிக்கப்படும் பல்வேறு நாடுகளைக் குறிக்கிறது.
- **இது உலகளாவிய வடக்கு (வளர்ந்த நாடுகள்) இலிருந்து பிராண்ட் கோட்டால் பிரிக்கப்படுகிறது.**
- **இந்தியா முதல் மற்றும் இரண்டாவது** VOGSS–ஐ 2023 ஜனவரி மற்றும் நவம்பரில் நடத்தியது.

## தூய்மையான நதிகளுக்கான ஸ்மார்ட் ஆய்வகம் (SLCR) திட்டம்

- வருணா நதியை புத்துயிர் பெறச்செய்ய வாரணாசியில் தூய்மையான நதிகளுக்கான ஸ்மார்ட் ஆய்வகத்தை (SLCR) நிறுவ இந்தியா, டென்மார்க் மற்றும் IIT–BHU இடையே ஒரு கூட்டு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இத்திட்டம் மேம்பட்ட ஆராய்ச்சி, நிலையான நடைமுறைகள், அரசு அமைப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு இடையேயான கூட்டு முயற்சிகளை ஒருங்கிணைக்கிறது.

குறிப்பு

- வருணா கங்கையின் ஒரு சிறிய துணை நதியாகும். இது உத்தரப் பிரதேசத்தின் பிரயாக்ராஜ் அருகே உள்ள பூல்பூரில் தோன்றி வாரணாசியில் கங்கையுடன் கலக்கிறது.

## தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகம் (NMHC)

- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் குஜராத்தின் லோத்தலில்

வெற்றி I.A.S. கல்வி மையம்

தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகம் (NMHC) என்ற உலகத்தரம் வாய்ந்த வசதியை உருவாக்க திட்டமிட்டுள்ளது.

- இது சர்வதேச சுற்றுலா தலமாக மாறவுள்ளது.
- லோத்தல் குஜராத்தில் சபர்மதி நதியின் துணை நதியின் அருகில், கம்பாத் வளைகுடாவுக்கு அருகில் அமைந்துள்ளது.
- லோத்தல் உலகின் மிகப் பழமையான செயற்கை துறைமுகமாக அறியப்படுகிறது.

## BioE3

- மத்திய அமைச்சரவை சமீபத்தில் உயிரித் தொழில்நுட்ப அடிப்படையிலான உற்பத்தியை வலுப்படுத்த BioE3 (பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் வேலைவாய்ப்புக்கான உயிரித்தொழில்நுட்பம்) என்ற உயர் செயல்திறன் உயிரி உற்பத்தியை ஊக்குவிக்கும் கொள்கைக்கு ஒப்புதல் அளித்தது.

**இக்கொள்கையின் ஆறு கருப்பொருள்:**

- உயிரி அடிப்படையிலான இரசாயனங்கள் மற்றும் நொதிகள்
- செயல்பாட்டு உணவுகள் மற்றும் திறன்மிக்க புரதங்கள்
- துல்லியமான உயிரி சிகிச்சைகள்
- காலநிலைக்கு ஏற்ற விவசாயம்
- கார்பன் பிடிப்பு மற்றும் அதன் பயன்பாடு
- எதிர்கால கடல் மற்றும் விண்வெளி ஆராய்ச்சி.
- இந்திய உயிரித்தொழில்நுட்பத் துறை
- 2023ல் $151.1 பில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது மற்றும் 2030க்குள் $300 பில்லியனை எட்டும் என கணிக்கப்பட்டுள்ளது.
- உலகளாவிய உயிரித்தொழில்நுட்பத் தொழிலில் 3% பங்கைக் கொண்டுள்ள இந்தியா, ஆசியாவில் மூன்றாவது இடத்திலும், உலகின் முதல் 12 உயிரித்தொழில்நுட்ப இடங்களில் ஒன்றாகவும் உள்ளது.
- முக்கிய முயற்சிகளில் தேசிய உயிரி மருந்து திட்டம், உயிரித்தொழில்நுட்ப தொழில் ஆராய்ச்சி உதவி கவுன்சிலின் நிதி ஆதரவு போன்றவை அடங்கும்.

## ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் (UPS)

- மத்திய அமைச்சரவை சமீபத்தில் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு (UPS) ஒப்புதல் அளித்தது.
- UPS ஓய்வுக்குப் பிறகு அரசு ஊழியர்களுக்கு உறுதியான ஓய்வூதியம் வழங்கும்.
- இத்திட்டம் 1 ஏப்ரல், 2025 முதல் அமலுக்கு வரும்.
- மத்திய அரசு ஊழியர்கள் தற்போதைய தேசிய ஓய்வூதிய திட்டத்திலிருந்து (NPS) UPS–க்கு மாறுவர்.
- மாநில அரசுகளும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் விருப்பத்தைக் கொண்டிருக்கும்.
- UPS, டி.வி. சோமநாதன் குழுவின் (2023) பரிந்துரைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது.
- UPS பழைய ஓய்வூதியத் திட்டம் (OPS) மற்றும் புதிய ஓய்வூதியத் திட்டம் (NPS) ஆகிய இரண்டின் நன்மைகளையும் இணைக்க முன்மொழிகிறது.

## வாகன கழிவுநீக்கக் கொள்கை

- சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் (MoRTH) சமீபத்தில் தன்னார்வ வாகன நவீனமயமாக்கல் திட்டம் அல்லது வாகன கழிவுநீக்கக் கொள்கையை அறிமுகப்படுத்தியது.
- இக்கொள்கை வாகனத்தின் வயதைப் பொருட்படுத்தாமல்,அதன் தகுதியின் அடிப்படையில் மட்டுமே பொருத்தமற்ற வணிக மற்றும் பயணிகள் வாகனங்களை தன்னார்வமாக கழிவுநீக்கம் செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது.
- இது பதிவு செய்யப்பட்ட வாகன கழிவுநீக்க வசதிகள் (RVSFs) மற்றும் தானியங்கி சோதனை

நிலையங்கள் (ATSs) மூலம் பொருத்தமற்ற மாசுபடுத்தும் வாகனங்களை படிப்படியாக நீக்குகிறது.

## விவசாய உள்கட்டமைப்பு நிதி

- மத்திய அமைச்சரவை 'விவசாய உள்கட்டமைப்பு நிதி (AIF)' கீழ் இதை கவர்ச்சிகரமானதாகவும், தாக்கம் மிக்கதாகவும், உள்ளடக்கியதாகவும் மாற்றுவதற்காக.நிதி வசதிக்கான மத்திய துறை திட்டத்தின் விரிவாக்கத்திற்கு ஒப்புதல் அளித்தது,

**விவசாய உள்கட்டமைப்பு நிதி (AIF) பற்றி**

- இது சாத்தியமான திட்டங்களில் முதலீடு செய்வதற்கான நடுத்தர – நீண்ட கால கடன் வழங்கும் வசதியாகும்.
- வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் ₹1 லட்சம் கோடி கடனாக வழங்கப்படும்.

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

# 7 சர்வதேச நிகழ்வு



## வங்காளதேசத்தில் புதிய அரசாங்கம்

- வங்கதேசத்தில் இடைக்கால அரசாங்கத்தின் தலைவராக முகமது யூனுஸ் பதவி ஏற்றுக்கொண்டார்
- நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையிலான 17 உறுப்பினர்கள் கொண்ட இடைக்கால அரசாங்கத்திற்கு அதிபர் மொஹம்மத் ஷாஹபுதீன் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

**வங்காளதேசம் பற்றி**

- தலைநகரம் – டாக்கா
- நாணயம் – வங்காளதேச டாகா
- அதிபர் – மொஹம்மத் ஷாஹபுதீன்

வெற்றி I.A.S. கல்வி மையம்

# 8 தமிழ்நாடு



## கீழடி அகழாய்வு

- சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடியில் சமீபத்தில் வடிகால் அமைப்பை ஒத்த **உள்ளீடற்ற சுடுமண் குழாய்** கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- இது **10வது கட்ட அகழாய்வில்** கண்டுபிடிக்கப்பட்டது.
- ஆறு குழாய்கள் ஒன்றாக இணைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.
- இது சங்ககால மக்களுக்கு **நீர் மேலாண்மை** அறிவு இருந்ததை நிரூபிக்கிறது.

கீழடி பற்றி

- வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ள சங்ககால (கி.மு. 500 முதல் கி.பி. 300 வரை) தளமாகும்.
- கீழடியில் அகழாய்வுகள் 2014 இல் தொடங்கின.
- கீழடி அருங்காட்சியகம் – மார்ச் 5, 2023
- 10வது கட்ட அகழாய்வு – ஜூன் 18, 2024

## வெள்ளத் தடுப்பு திட்டங்கள்

- சென்னையில் முன்மொழியப்பட்ட நகர்ப்புற வெள்ளத் தடுப்பு திட்டங்களுக்காக **தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் ₹150 கோடி மானியத்தை** அனுமதித்துள்ளது.
- தேசிய பேரிடர் தணிப்பு நிதியின் கீழ் மாநில அரசுக்கு முதல் தவணையாக இந்த மானியம் வழங்கப்படும்.
- **ஐந்து முக்கிய திட்டங்களுக்கு மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.** அவை:
- சிறு நீர்நிலைகளுடன் இணைக்கப்பட்ட சில உபரி கால்வாய்களை மேம்படுத்துதல்
- தற்போதுள்ள வடிகால் வலையமைப்பில் உள்ள இடைவெளிகளை நிரப்ப புதிய மழைநீர் வடிகால்களை அமைத்தல்
- ஸ்பாஞ்ச் பூங்காக்களை உருவாக்குதல்
- எட்டு நீர்நிலைகளை புனரமைத்தல்
- நீர்த்தேக்கங்களின் செயல்பாடுகளை தானியங்கிமயமாக்க மேற்பார்வை கட்டுப்பாடு மற்றும் தரவு கைப்பற்றல் (SCADA) அமைப்பை நிறுவுதல்.

NDMA பற்றி

- பேரிடர் மேலாண்மைக்கான உச்ச அமைப்பாகும்.
- தலைவர் – இந்தியப் பிரதமர்.
- பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 ன் மூலம் தொடங்கப்பட்டது

## இந்தியாவின் 30வது வெளியுறவு எல்லைப் பேச்சுவார்த்தை

- இந்தியா–சீனா எல்லை விவகாரங்களுக்கான ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்புக்கான செயல்முறை பொறிமுறையின் (WMCC) 30வது கூட்டம் **புது டெல்லியில்** நடைபெற்றது.
- எல்லைப் பகுதிகளில் அமைதியையும் நிம்மதியையும் கூட்டாக நிலைநாட்ட வேண்டியதன் அவசியத்தை இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

குறிப்பு

- சோசலிச அல்லாத நாடுகளில் சீனாவுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திய முதல் நாடு இந்தியா (ஏப்ரல் 1, 1950) ஆகும்.

வெற்றி I.A.S. கல்வி மையம்

- இந்தியா – சீனா போர் – 1962
- **அக்சாய் சின்** – இந்தியா மற்றும் சீனாவுக்கு இடையேயான சர்ச்சைக்குரிய பகுதி.

## தமிழ்ப் புதல்வன் திட்டம்

- **ஆகஸ்ட் 9 அன்று கோயம்புத்தூரில் தமிழ்ப் புதல்வன் திட்டம்** தொடங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.
- 2024–25 ஆம் ஆண்டில் 3.28 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இத்திட்டத்தால் பயனடைவர்.
- இத்திட்டம் மாணவிகளுக்காக தொடங்கப்பட்ட புதுமைப் பெண் திட்டத்தைப் போன்றது.

தமிழ்ப் புதல்வன் திட்டம் பற்றி

- நோக்கம் – பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த மாணவர்களிடையே உயர்கல்வியை ஊக்குவித்தல்.
- பயன் – அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்து உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு **மாதம்** ₹1,000 நிதி உதவி வழங்கப்படும்

## பிரதமர் சூர்ய கர் மானியத் திட்டம்

- **தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்** (TANGEDCO) பிரதமர் சூர்ய கர் மானியத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் **25 லட்சம் வீடுகளுக்கு சூரிய மேற்கூரை மின்நிலையங்களை நிறுவ இலக்கு** நிர்ணயித்துள்ளது.
- தற்போதைய திட்டத்தின் கீழ் அதிகபட்சம் 3 கிலோவாட் (KW) வரை நிறுவுவதற்கு அதிகபட்சம் ₹78,000 மானியம் வழங்கப்படும் என்று டான்ஜெட்கோ தெரிவித்துள்ளது.

**பிரதமர் சூர்ய கர் மானியத் திட்டம் பற்றி**

- தொடக்கம் – பிப்ரவரி 13, 2024.
- நோக்கம் – மேற்கூரை சூரிய மின்நிலையங்களை நிறுவுதல் மற்றும் ஒரு கோடி வீடுகளுக்கு மாதந்தோறும் **300 யூனிட் வரை இலவச மின்சாரம்** வழங்குதல்.

## தகைசால் தமிழர் விருது

- '2024 தகைசால் தமிழர்' விருதுக்கு காங்கிரஸ் மூத்த தலைவர் **குமரி அனந்தன்** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்த ஆண்டு சுதந்திர தின விழாவில் முதலமைச்சர் இந்த விருதை வழங்குவார். இதில் ₹10 லட்சம் **ரொக்கப்பரிசும், பாராட்டுப் பத்திரமும்** அடங்கும்.

**தகைசால் தமிழர் விருது பற்றி**

- இவ்விருது 2021–ல் நிறுவப்பட்டது.
- நோக்கம் – தமிழ்நாட்டின் நலனுக்கும் தமிழ் சமூகத்தின் வளர்ச்சிக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய ஒரு சிறந்த ஆளுமையை கௌரவித்தல்.

## ஆளுகைக்கான புத்தாக்க மையம்

- ஆளுகைக்கான புத்தாக்க மையம் **மாநில திட்டக்குழுவால்** அமைக்கப்பட்டுள்ளது.
- இது **இந்தியாவில் முதன்முறையாக தொடங்கப்பட்ட முன்முயற்சியாகும்.**
- **நோக்கம்** – தமிழ்நாட்டில் ஆளுகையில் புத்தாக்க சூழலை வளர்த்தல்.
- இது அரசுத் துறைகளுக்கும், மாவட்ட நிர்வாகங்களுக்கும் புதுமையான திட்டங்களை முன்னோட்டமாக செயல்படுத்துவதிலும், திறம்பட ஆளுகையை மேம்படுத்தும் பல்வேறு தொழில்நுட்பங்களில் திறன் மேம்பாட்டிலும் ஆதரவு வழங்கும்.
- இது தமிழ்நாடு புத்தாக்க முன்முயற்சிகள் திட்டத்தின் கீழ் தகுதியான நிறுவனங்களுக்கு புத்தாக்கங்களை அடையாளம் காணவும், நிதி பெறவும் இது ஆதரவு அளிக்கும்.

## மூத்த தமிழ் அறிஞர்களுக்கு நிதி உதவி

- 2022–23 ஆம் ஆண்டுக்கான 100 **மூத்த தமிழ் அறிஞர்களுக்கு நிதி உதவிகளை** தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் எம்.பி. சாமிநாதன் வழங்கினார்.
- முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதியின் நினைவு நாள் நிகழ்வில் இது வழங்கப்பட்டது.
- அறிஞர்கள் மாதம் ₹3,500 மற்றும் மருத்துவப்படிக்காக மேலும் ₹500 பெறுவார்கள்.

## தமிழ்ப் புதல்வன் திட்டம்

- **ஆகஸ்ட் 9 அன்று கோயம்புத்தூரில்** தமிழ்ப் புதல்வன் திட்டம் தொடங்கப்பட்டது.
- 2024–25 ஆம் ஆண்டில் 3.28 **லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள்** இத்திட்டத்தால் பயனடைவர்.
- இத்திட்டம் மாணவிகளுக்காக தொடங்கப்பட்ட புதுமைப் பெண் திட்டத்தைப் போன்றது.

**தமிழ்ப் புதல்வன் திட்டம் பற்றி**

- நோக்கம் – பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த மாணவர்களிடையே உயர்கல்வியை ஊக்குவித்தல்.
- பயன் – அரசு மற்றும் அரசு உதவி பெறும் **பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்து உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ₹1,000 நிதி உதவி வழங்கப்படும்**

## கருணாநிதியின் பிறந்தநாள் நூற்றாண்டு நினைவாக நாணயம்

- முன்னாள் தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதியின் பிறந்த நூற்றாண்டை குறிக்கும் வகையில் ஆகஸ்ட் 18 அன்று சென்னையில் நடைபெறும் விழாவில் **மத்திய அரசு நினைவு நாணயத்தை வெளியிட உள்ளது.**
- முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் கலைவாணர் அரங்கத்தில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், இந்த நாணயத்தை வெளியிடுகிறார்.
- **நாணய வெளியீடு (கலைஞர் டாக்டர் மு.கருணாநிதியின் பிறந்த நூற்றாண்டு விழா நினைவு நாணயம் வெளியீடு) விதிகள், 2024–ஐ** மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டது.
- இந்த நாணயத்தின் மதிப்பு ₹100 ஆகும்

## முதல்வர் மருந்தகங்கள்

- முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தனது சுதந்திர தின உரையில் மாநிலம் முழுவதும் முதல்வர் மருந்தகங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.
- நோக்கம் – மலிவு விலையில் பொதுப் பெயர் மருந்துகளை வழங்குதல்.
- மொத்தம் 1,000 **மருந்தகங்கள்** 2025 பொங்கல் தினத்தன்று செயல்பாட்டுக்கு வரும்.

## முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டம்

- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது சுதந்திர தின உரையில் முதல்வரின் **காக்கும் கரங்கள் திட்டத்தை** அறிவித்தார்.
- நோக்கம் – ஓய்வுபெற்ற ராணுவ வீரர்கள் வங்கிகளில் இருந்து **ரூ.1 கோடி வரை கடன் பெற்று தொழில் தொடங்குவதற்கு கடன் உதவி அளித்தல்.**

## தமிழ்நாடு அரசு விருதுகள்

- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் பல்வேறு விருதுகளை வழங்கினார்.
- **கல்பனா சாவ்லா துணிச்சல் மற்றும் சாகச செயலுக்கான விருது**
  - வெற்றியாளர் – ஏ. சபீனா
  - காரணம் – வயநாடு மண்சரிவுக்குப் பின் 35க்கும் மேற்பட்ட உயிர்களைக் காப்பாற்றிய நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த செவிலியர்.

வெற்றி I.A.S. கல்வி மையம்
VETRII I.A.S. STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

- **தகைசால் தமிழர் விருது**
  - வெற்றியாளர் – குமரி அனந்தன்
  - காரணம் – 1978ல் நாடாளுமன்றத்தில் தமிழில் பேச அனுமதி பெற அவர் மேற்கொண்ட தொடர் முயற்சிகள்.
- **டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருது**
  - வெற்றியாளர் – **இஸ்ரோ விஞ்ஞானி பி.வீரமுத்துவேல்**
  - காரணம் – சந்திரயான்–3 திட்டத்தின் திட்ட இயக்குநர்.
- **முதலமைச்சரின் நல்லாளுமை விருது**
  - ஜெ. இன்னோசென்ட் திவ்யா (நான் முதல்வன் திட்டம்)
  - எஸ். திவ்யதர்ஷினி (முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்)
  - கே. எலம்பகவத் (சென்னை சர்வதேச புத்தக கண்காட்சி)
  - என். கோபாலகிருஷ்ணன் (இறந்தோர் உறுப்பு தான மாற்று அறுவை சிகிச்சை திட்டம்)
  - டி. வனிதா (கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்)
- **மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பான சேவைக்கான விருதுகள்**
  - ஜெ. விஜயலட்சுமி (சிறந்த மருத்துவர்)
  - வித்யா சாகர் (சிறந்த நிறுவனம்)
  - எம். சூசை ஆண்டனி (சிறந்த சமூக சேவகர்)
  - மெசர்ஸ். சந்தானம் பேக்கேஜிங் பிரைவேட் லிமிடெட் (சிறந்த தனியார் முதலாளி)
  - காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி (சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி)
- **பெண்கள் நலனுக்கான சேவைகள்**
  - சிறந்த நிறுவன விருது – ஐஸ்வர்யம் அறக்கட்டளை, மதுரை
  - சிறந்த சமூக சேவகர் விருது – மீனா சுப்ரமணியன் சிறப்பாக செயல்படும் உள்ளாட்சி அமைப்புகள்
  - சிறந்த மாநகராட்சி – **கோயம்புத்தூர்**
  - சிறந்த நகராட்சி – **திருவாரூர்**
  - பேரூராட்சி – **சூலூர் (கோயம்புத்தூர்)**

## M பாக்ஸ்

- தமிழ்நாடு பொது சுகாதார இயக்குனரகம் (DPH) மற்றும் தடுப்பு மருத்துவத் துறை விமான நிலையம் மற்றும் துறைமுக சுகாதார அதிகாரிகளை மிகவும் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.
- குரங்கு அம்மை வைரஸால் ஏற்படும் M பாக்ஸ் நோயை **உலக சுகாதார அமைப்பு** (WHO) சர்வதேச அக்கறைக்குரிய **பொது சுகாதார அவசரநிலையாக** (PHEIC) அறிவித்த பின்னர் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- இதுவரை தமிழ்நாட்டில் எந்த நோய் தோற்றும் பதிவாகவில்லை.

**மங்கிபாக்ஸ் பற்றி**

- இது ஒரு விலங்குகள் மூலம் **பரவும் வைரஸ் நோய்.**
- முதன்முதலில் 1958–ல் கண்டுபிடிக்கப்பட்டது

## அத்திகடவு–அவிநாசி நிலத்தடி நீரேற்று மற்றும் குடிநீர் வழங்கல் திட்டம்

- தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சமீபத்தில் **அத்திகடவு–அவிநாசி நிலத்தடி நீர் நீரேற்று மற்றும் குடிநீர் வழங்கல் திட்டத்தை** தொடங்கி வைத்தார்.
- இது **ஈரோடு, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர்** மாவட்டங்களில் 1,045 நீர்நிலைகளை நிரப்பி, 24,468 ஏக்கர் விவசாய நிலங்களுக்கு பாசன வசதி அளிப்பதை இலக்காக கொண்டுள்ளது.

**குறிப்பு**

- **1972–ல்** மு.கருணாநிதி இத்திட்டத்தை செயல்படுத்த முன்மொழிந்தார்.
- **2019–ல்** அடிக்கல் நாட்டப்பட்டது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

## தொழிற்சாலைக்குள் குடியிருப்பு வளாகம்

- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமீபத்தில் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள வல்லம் வடகல் சிப்காட் தொழிற்பேட்டையில் ₹706.50 கோடி மதிப்பிலான தொழிற்சாலைக்குள் குடியிருப்பு வளாகத்தை திறந்து வைத்தார்.
- இந்தியாவின் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் **42% பேர் தமிழகத்தில்** உள்ளனர்.
- இந்த வசதி இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது மேலும் 18,720 **தொழிலாளர்களை** இங்கு தங்க வைக்க முடியும்.
- இது சிப்காட் மற்றும் ஃபாக்ஸ்கான் கூட்டு முயற்சியில் அமைக்கப்பட்டது.

குறிப்பு

- தமிழ்நாடு 2030-க்குள் $1 டிரில்லியன் பொருளாதாரத்தை அடைய இலக்கு நிர்ணயித்துள்ளது.
- அரசு பெண்களின் நலனுக்காக **புதுமைப் பெண் திட்டம் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்** போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

## கூர்நோக்கு இல்லங்களை கண்காணிக்க குழு அமைப்பு

- குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை, தமிழ்நாடு சிறப்பு சேவைகள் அதிகாரமளிக்கப்பட்ட குழுவை அமைத்துள்ளது.
- இது ஒரு சிறப்பு கண்காணிப்பு குழுவாகும்.
- இது சட்டத்துடன் முரண்பட்ட குழந்தைகளுக்கான அரசு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பாதுகாப்பு இடங்கள், மற்றும் பின்தொடர் பராமரிப்பு இல்லங்களின் பராமரிப்பை மேற்பார்வையிடும்.
- இது 15 **உறுப்பினர்களைக்** கொண்ட குழுவாகும்.
- இது தலைமைச் செயலாளர் தலைமையில் இயங்கும்.

குறிப்பு

- இது **நீதிபதி கே. சந்துரு** தலைமையிலான ஒரு நபர் குழு அரசு கண்காணிப்பு இல்லங்களின் திறம்பட செயல்படுவதற்கும் நிர்வாகத்திற்கும் மாநில அரசுக்கு பரிந்துரைகளை வழங்கியதைத் தொடர்ந்து அமைக்கப்பட்டது.

## திட்டக்குழுவின் ஆய்வு

- **தமிழ்நாடு மாநில திட்டக்குழு** (SPC) சமீபத்தில் கிழக்கு தொடர்ச்சி மலையில் உள்ள அடர்த்தியான பழங்குடி மாவட்டங்களான **சேலம், கள்ளக்குறிச்சி** மற்றும் **திருவண்ணாமலையில்** அரசு திட்டங்களின் செயலாக்கம் குறித்து விரிவாக மதிப்பீடு செய்தது.
- அடிப்படை உள்கட்டமைப்பு, போக்குவரத்து மற்றும் கல்வி தொடர்பான தொடர்ச்சியான சவால்களை இது கண்டறிந்தது.

முக்கிய கண்டுபிடிப்புகள்

- **சிறிய** நகரங்களை இணைக்கும் **அரசு பேருந்து சேவைகளின்** எண்ணிக்கையையும் அதிர்வெண்ணையும் அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது.
- இந்த பகுதிகளில் சரியான சாலைகள் இல்லை.
- மேலும் **பள்ளிகளை நிறுவுவதற்கும்,** ஏற்கனவே உள்ள **உயர்நிலைப் பள்ளிகளை** மேல்நிலைப் **பள்ளிகளாக தரம் உயர்த்துவதற்கும் தேவை உள்ளது.**

## தமிழ்நாடு முதலீட்டு மாநாடு 2024

- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமீபத்தில் சென்னையில் **தமிழ்நாடு முதலீட்டு மாநாடு** 2024-ஐ தொடங்கி வைத்தார்.
- ₹17,616 கோடி மதிப்பிலான 19 **தொழில் திட்டங்களை** அவர் தொடங்கி வைத்தார்.
- **₹51,157 கோடி மதிப்பிலான 28 திட்டங்களுக்கு** அவர் அடிக்கல் நாட்டினார்.

வெற்றி I.A.S. கல்வி மையம்

**முக்கிய அம்சங்கள்**

- **தூத்துக்குடியில் செம்கார்ப்பின் பசுமை ஹைட்ரஜன்** திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
- இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் மூலக்கூறுகளின் வணிக உற்பத்தியைத் தொடங்கும் மாநிலம் தமிழகமாகும்.
- **டிட்கோ மற்றும் டாடா டெக்னாலஜிஸ் இணைந்து தமிழ்நாடு பொறியியல் மற்றும் புத்தாக்க மையம் (TN Engine) என்ற பொது பொறியியல் நிறுவனத்தை** அமைக்கின்றன.

## முதலமைச்சரின் அமெரிக்கா பயணம்

- அமெரிக்காவின் அப்ளைடு மெட்டீரியல்ஸ் நிறுவனம் சென்னையில் குறிப்பிடத்தக்க செயற்கை நுண்ணறிவு (AI) இயக்கப்படும் தொழில்நுட்ப மேம்பாட்டு சிறப்பு மையத்தை நிறுவுவதற்காக தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்திட்டுள்ளது. இது குறிப்பாக அரைக்கடத்தி மற்றும் உபகரண உற்பத்தியில் கவனம் செலுத்தும்.
- மின்னணுவியல் மற்றும் அரைக்கடத்திகள் போன்ற முக்கிய துறைகளில் முதலீடு செய்வது 2030க்குள் $1 டிரில்லியன் பொருளாதார இலக்கை அடைய தமிழ்நாட்டிற்கு உதவும்.
- தமிழ்நாடு தென் ஆசியாவின் மிகவும் முக்கியமான அறிவு மற்றும் புத்தாக்க மையமாக உள்ளது.

## தமிழ்நாடு – சான் பிரான்சிஸ்கோ

- தமிழக அரசு ₹900 கோடி மதிப்பிலான முதலீடுகளுக்காக ஆறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை (MoUs) கையெழுத்திட்டது.
- அமெரிக்காவுக்கான பயணத்தின் ஒரு பகுதியாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் சான் பிரான்சிஸ்கோவில் முதல் நாளன்று இவை கையெழுத்தானது.

வெற்றி I.A.S. கல்வி மையம்
Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்